பக்கங்கள் 13 + 3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 19 ஞாயிற்றுக்கிழமை 08.12.2024 அதிர்வு 129

## 16ஆம் திகதி டில்லி பறக்கின்றார் அநுர



ஜனாதிபதி அநுரகு மார திஸாநாயக்க எதிர் வரும் 16 ஆம் திகதி இந் தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன்

# தீர்வு குறித்து சுவிஸ் பேச்சு

(கி.வசந்தன்)

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வு மற்றும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சுவிஸ் அரசின் அதிகாரிகள் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை யைத் தீர்ப்பது தொடர்பில் தமிழர் தரப்பின் நிலைப்பாடு தொடர்பிலும், ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான புதிய அரசுடன் நடைபெறக்கூடிய பேச்சுகள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப் பட்டன.

இந்தச் சந்திப்பில் சுவிஸ் வெளிநாட்ட லுவல்கள் திணைக்களத்தின் உதவிச் செயலாளரும், சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் தலைவ ருமானரிம் எண்டர்லின், இலங்கைக் கான சுவிஸ் தூதுவர் சிரிவோல்ற், இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் மனிதப் பாதுகாப்புக்கான முதன்மைச் செயலாளர் ஜெஸ்ரின் பொய்லற், சுவிஸ் தூதரகத்தின் மூத்த தேசிய திட்ட அதி காரி சுசந்தி கோபாலகிருஷ்ணன் உள் ளடங்கிய குழுவினர் பங்கேற்ற னர்.

இதில், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்க ளான சி.சிறீதரன், ப.சத்தியலிங்கம் ஆகியோரும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாத னும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் கலந்துகொண்டனர்.

# மார்ச் மாத இறுதியில் குட்டித் தேர்தல்?

2025 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக் குழு திட்டமிட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனு கோரப்படவுள்ள நிலையில், அதற்கான சட்டம் அடுத்த மாதம் நிறைவேற்றப்படவுள்ளது. அதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனு கோரப்படுவதால் குட்டி தேர்தலை நடத்து வதற்காக ஏற்கனவே செலவளிக்கப்பட்ட சுமார் 72 கோடி ரூபா வீண் செலவு எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




341 உள்ளூராட்சி சபைகளுக்கு 8 ஆயிரத்து 711 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஏற்கனவே கோரப் பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 80 ஆயிரத்து 672 பேர் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. எல்பிட்டிய பிரதேச சபை தவிர ஏனைய 341 சபைகளுக்கும் தேர்தல் நடத்தப்படும்.



# யாழ். பொம்மைவெளியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள்

(எஸ்.நிதர்ஷன்)

ஈழம் நிசான் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் – பொம்மை வெளி பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கிக் வைக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தலைமை யில் இந்த நிவாரணப் பணிகள் இடம்பெற்றன.

2 ஆயிரம் ரூபா பெறுமதியான 200 இற்கும் மேற்பட்ட பொதிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.





## 16ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார் எனத் தெரியவருகின்றது. 16 மற்றும் 17 ஆம் திகதிக ளில் இந்தியா வில் முக்கியத்துவமிக்க சந்திப்புகளில் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் சுப்பிர மணியம் ஜெய்சங்கர் ஆகியோருடன் ஜனாதிபதி பேச்சு நடத்தவுள்ளார் எனவும், வர்த்தக சமூகத்தினருடனும் சந்திப் பொன்று இடம்பெறவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரும் ஜனாதிபதியுடன் டில்லி செல்லவுள்ளனர். மீனவர் பிரச்சினை சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

# எலிக்காய்சல் தொடர்பில் அவதானமாக இருங்கள்!

## பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவிப்பு

(த.சுபேசன்)

வெள்ள நீர் தேங்கி நின்ற இடங்களில் வசிப்போரும் வயல் வேலைகளுடன் தொடர்புடையோரும் எலிக் காய்சல் தொடர்பில் மிக அவதானமாக இருக்கவேண்டும்.

இவ்வாறு பூநகரிப் பிரதேச மேற பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

பூநகரிப் பிரதேச சபையுடன் இணைந்து பொது மக்களுக்கு எலிக் காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு அறி வித்தலை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எலிகள் மற்றும் காட்டு விலங்குகள் கழிக்கும் சிறுநீருடன் எலிக் காய்ச்சலை உருவாக்கும் "லெப்ரோஸ்பைரா" எனும் பக்றீரியா நீர்நிலைகளை அடைகிறது. இது முழங்கால் வரை மூடிய பிளாஸ்டிக் காலுறைகளை அணியாது வயல் வேலைகளிலும் வெள்ள நீரில் நடமாடுகையில் காலிலுள்ள மிகச்சிறிய சிராய்ப் புக் காயங்களூடாகத் தொற்றக் கூடியது.

அத்துடன் இந்தக் கிருமி மாசுபட்ட நீரில் குளிக்கும் போது வாய், மூக்கு, கண்களிலுள்ளமென்சவ்வுகளூடாகவும் தொற்றக்கூடியது.

எனவே வெள்ளப் பெருக்கை அடுத்து வயல்கள், நீர்நிலைகளூடாக மட்டுமன்றி வெள்ளநீர் தேங்கிய இடங்களிலும் எலிக்காய்ச்சல் கிருமி தொற்றும் ஆபத்துண்டு.

இவ்வாறான இடங்களில் நடமாடும் போது கிருமிகள் எம்மை அணுகாமல் உரிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

இந்த நோய் அறிகுறிகளாக ஆரம் பத்தில் காய்ச்சல், தலைவலி, தசை நோவு,வாந்தி, கண்கள் சிவத்தல், வயிற்றோட்டம், அடிவயிற்றுநோவு, இருமல், தொண்டை நோவு என்பன காணப்படலாம்.

இதன் தீவிர நிலைமையில் சிறு நீரகங்கள் செயலிழப்பு, மஞ்சல்கா மாளை நிலை, குருதிப்பெருக்கு, சுவாசிப்பதில் சிரமங்கள் மற்றும் மூளை, முண்ணாண், மென்சவ்வுகளில் அளர்ச்சி போன்ற நிலைகள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் ஏற்படலாம்.

ஆரம்பத்திலேயே நோய் அறி குறிகளை இனங்கண்டால் உங்கள்



பிதேசபொது சுகாதார பரிசோதகரையோ, அருகிலுள்ள அரச வைத்திய சாலையையோ நாடவேண்டும். இதனை குணப்படுத்த மருந்துகள் உண்டு. அவற்றை உரிய ஆலோசனைப்படி பயன்படுத்த வேண்டும்.

நோயுடையவர்கள் இனங்காணப் பட்டு உறுதிப்படுத்தப்பட்டால் தொடர் பாளர்கள், அயலிலுள்ளோர் முற்பாது காப்பு மருந்து வில்லைகளை பிரதேச பொது சுகாதார பரிசோதகரிடமோ சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையிலோ இலவசமாகப் பெற்று பயன்படுத்தி நோய் பரவலைத் தடுக்க முடியும்.- என்றார்.



# வவுனியா வாள்வெட்டுக் கொலை தொடர்பில் 5 இளைஞர்கள் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை - சேமமடுவில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

சேமமடு- இளமருதங்குளம் பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் நாவற்குளம் பகுதியைச் சேர்ந்த செல்வநிரோயன் (வயது 46) என்ற குடும்பஸ்தர் மரணமடைந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஓமந்தைப் பொலிஸார் வாள்வெட்டில் ஈடுபட்டவர்கள் பயணித்த வாகனச் சாரதியை அன்றைய தினமே கைது செய்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரும், ஓமந்தை குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேரை கைதுக் செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

வவுனியா, உக்குளாங்குளம், கூமாங்குளம், வேலங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 5 இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்களாவர்.

மேலதிக விசாரணைகளின் பின் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.




# வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா

(கி.வசந்தன்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட செயலகமும் வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர பிரதம அதிதியாகக் கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது, பல கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், ஆக்க இலக்கியத்துறைக்கான வவுனியம் விருது ஊடகவியலாளர் சிவகுமார் திவியந்தினிக்கு வழங்கப்பட்டதுடன், மேலும் 6 பேருக்குப் பல்வேறு துறைகளில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தியமைக்காக வவுனியம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.












நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நல்லாலோசனை

நாட்டின் பிரசித்தி பெற்ற ஜனாதிபதி சட்டத்தரணிகள் மற்றும் மூத்த சட்டத்தரணிகள், சட்டப் பிரமுகர்களைக் கொண்ட ‘சட்டத்தரணிகள் ஒன்றிணைவு’ அமைப்பு முழுமையான - வலிமையான - நாடாளுமன்றப் பலத்துடனும் நிறைவேற்றதிகாரத்துடனும் ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி தரப்பிடம் - புதிய ஆட்சியாளர்களிடம் - அத்தரப்பு தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வாக்குறுதி அளித்த சட்டத் திருத்தங்களை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என பகிரங்க அறிக்கை மூலம் வலியுறுத்தியிருக்கின்றது.

தேசத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான முக்கியமான சட்டச் சீர்திருத்தங்களை முன்னிலைப்படுத்தி, நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் இணையவழிப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்வதற்கும் முன்னுரிமை அளிக்குமாறு சட்டத்தரணிகள் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

சமீபத்திய தேர்தல்களின் போது மக்களால் ஒப்படைக்கப்பட்ட சட்டமன்ற ஆணையை மதிக்குமாறு இலங்கையின் புதிய அமைச்சரவை மற்றும் பத்தாவது நாடாளுமன்றத்தை வழக்கறிஞர்களின் அந்தக் கூட்டுக்குழு கோரியிருக்கின்றது.

பொதுமக்கள் இந்தத் தேர்தல்கள் மூலம் வெளிப்படுத்திய அவர்களின் இறையாண்மை இந்த அவசர சீர்திருத்தங்கள் தான். அவற்றுடன் - இந்த அவசர சீர்திருத்தங்களுக்கு தீர்வு காணும் ஏற்பாடுகளுடன் - இந்த ஆட்சிப் பீடத்தின் சட்டமியற்றும் நிகழ்ச்சி நிரல் ஒத்துப்போக வேண்டும் என்று இந்த சட்டப் பிரமுகர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை உட்பட பொது நிறுவனங்களின் சுதந்திரம் ஆகியவற்றில் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் தீங்கான தாக்கத்தை சட்டத்தரணிகள் கூட்டமைப்பு அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது.

இந்த ஆட்சி முறைமை பல தசாப்தங்களாக - குறிப்பாக 2009 மற்றும் 2024 க்கு இடையில் - அதிகார துஷ்பிரயோகம், ஊழல் மற்றும் நிறுவனங்களின் மீதான மக்களின் நம்பிக்கையை சிதைத்துவிட்டது என்று சுட்டியுள்ள அவர்கள், நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான அரசமைப்பை உருவாக்கும் பணியை பதவியேற்ற முதல் வருடத்திற்குள் முடிக்க முடியும் என்று தங்களின் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர். மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும் ஜனநாயக ஆட்சியை வலுப்படுத்தவும் இந்த சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு அரசாங்கத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பொது உரிமைகளை நசுக்க வரலாற்று ரீதியாக தவறாகப் பயன்படுத்தப்பட்ட அடக்குமுறைச் சட்டம் என்று வர்ணித்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும் அந்தக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருக்கின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டமானது இலங்கையில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புக் கட்டமைப்பை கேலிக்கூத்தாக்கியுள்ளது. மேலும் சட்டபூர்வமான கருத்து சுதந்திரத்தை நசுக்குவதற்கு தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்களிற்கு எதிராக இதனைத் தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் பயன்படுத்தியுள்ளனர் என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரஜைகளிற்கு சாதாரணமாக வழங்கப்படவேண்டிய மனித உரிமை பாதுகாப்புகளை முழுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கொடூரமான விதிமுறைகளிற்காக பெயர்போயுள்ளது இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம். பயங்கரவாதம் பற்றிய தெளிவற்ற மற்றும் பரந்துபட்ட வரையறையின் அடிப்படையில் கைது செய்வதற்கும் காவலில் வைப்பதற்கும் கட்டுமட்டில்லாத அதிகாரங்களை அது வழங்குகின்றது என்ற விபரீத நிலைமையையும் அந்த அமைப்பு நினைவூட்டியுள்ளது.

இவ்வாறான அதிகாரங்கள் நீதி ஆய்விற்கு உட்படுத்தப்படுவதில்லை. மேலும் இது பரந்துபட்ட அசாதாரண அதிகாரங்களை ஜனாதிபதிக்கும் அதிகாரத் தரப்புக்கும் வழங்குகின்றது என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் அமைப்பு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது மனித உரிமைகளிற்கு மாத்திரமின்றி நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கும் அவசியமானது எனவும் சுட்டியுள்ளது.

நீதியான ஆட்சியை வழங்குவதிலும் - உண்மையான இன நல்லிணக்கம், அமைதி, சமாதானம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை ஏற்படுத்துவதிலும் - நேர்மையான விருப்பம் இருந்தால் இந்த ஆலோசனைகளையும் கோரிக்கைகளையும் இந்த ஆட்சிப்பீடம் முழு மனதுடன் ஏற்று விரைந்து நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும். செய்யுமா அரசு?



# 90 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதையுடன் மூவர் கைது!

90 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் மற்றும் குஷ் போதைப் பொருள்களுடன் பொரலஸ்கமுவ, தெஹிவளை மற்றும் கொஹுவல பிரதேசங்களில் பாரியளவிலான போதைப் பொருள் கடத்தல்களில் ஈடுபட்ட மூவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை மற்றும் கொம்பனி தெரு பிரதேசங்களைச் சேர்ந்த 40, 41 மற்றும் 54 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 708 கிராம் ஹெரோயின் மற்றும் 92 கிராம் குஷ் போதைப் பொருளை விசேட அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, இவர்கள் தற்போது வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள மற்றும் இந்த நாட்டில் போதைப் பொருள் வலையமைப்பை நடத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவருக்கு சொந்தமான போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பெரு வெள்ளத்தில் உடைத்தெறியப்பட்ட நீர்க்குழாய் திருத்த வேலைகள் பூர்த்தி!

## எந்நேரமும் விநியோகம் வழமைக்கு திரும்பும்

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் உடைத்தெறியப்பட்ட பிரதான நீர்க்குழாய்களின் முக்கிய திருத்த வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன.

குழாய்கள் திருத்தப்பட்ட பின்னர் அம்பாறையில் இருந்து அட்டப்பள்ளம் நீர்த்தாங்கிக்கு நீர் முதல் தடவையாக இன்று (08) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.39 மணியளவில் வந்துள்ளது.

அங்கு வழமைபோல் இரசாயனவியலாளர்களால் நீர் சோதனை செய்யப்பட்டது. அதன் போது பாவனைக்கு சற்று பொருத்தமானதாக இல்லை என்று கூறப்பட்டதால் வந்த நீர் முற்றாக வெளியேற்றப் பட்டு சுத்திகரிக்கப்பட்டது.

இன்று பிற்பகல் மீண்டும் தண்ணீர் நிரப்பி நிந்தவூர் காரைதீவு தண்ணீர் தாங்கிகளுக்கு வழங்கப்படும். அதன் பின்னர் பொதுமக்கள் நீரைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பன்னிரண்டு நாள்களாக நயினாகாட்டுப் பகுதியில் பிரதான குழாய்கள் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரால் இரவு பகலாக திருத்தம் செய்யப்பட்டு வந்தது.

நேற்று (07) சனிக்கிழமை பகல் குறித்த குழாய்கள் திருத்திப் பொருத்தும் பணி நிறைவு பெற்றிருக்கின்றது.

குறித்த குழாய்கள் எதிர்வரும் வெள்ள அனர்த்தத்தின்போது சேதமடையாமல் இருக்க உரிய தடுப்பு அணை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் ஹைதர்அலி, பொறியியல் பிரிவுப் பொறியியலாளர் தாமோதரம் வினாயகமூர்த்தி, பொறியியலாளர் பி. மயூரதன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் நேற்றும் களத்தில் நின்று இறுதிக்கட்ட பணிகளில் ஈடுபட்டனர்.

காரைதீவுக் கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# வவுனியாவில் டெங்கு சோதனை; பலருக்கு எதிராக வழக்கு பதிவு!

## பொலிஸார் களத்தில் குதிப்பு!!

(கி.வசந்தன்)

வவுனியா நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர். டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த பலருக்கு எதிராக வழக்குத் தாக்கலும் செய்திருந்தனர்.

அண்மையில் பெய்த மழையின் காரணமாக டெங்கு நோய் தாக்கமும் வவுனியாவில் அதிகரித்து வருகின்றது.

இதனை அடுத்து வவுனியா நகரம் மற்றும் நகரை அண்டிய பகுதிகளில் உள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையங்கள் என்பவற்றில் வவுனியா பொலிஸார் இன்று (08) திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதன்போது, ரயர்கள், சிரட்டைகள், வெற்றுப் போத்தல்கள் இடங்களில் காணப்பட்டன. அவற்றில் நீர் தேங்கியிருந்த நிலையில் நுளம்புக் குடம்பிகளும் இனங்காணப்பட்டன. அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களின் வீட்டு உரிமையாளர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதேவேளை, டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வருவதால் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தமது அயல் பகுதிகளை நுளம்புகள் பெருகாத வண்ணம் சுத்தமாக வைத்திருக்குமாறும் பொலிஸார் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# 15 லட்சம் ரூபா பெறுமதியான சங்குகளுடன் ஒருவர் கைது!

15 லட்சம் ரூபா பெறுமதியான சங்குகள் மற்றும் பல வகையான மட்டிகளுடன் சந்தேகநபர் ஒருவர் இன்று (08) கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகளின் சோதனையின் போது இரண்டு பெரிய ராஜ சங்கு மற்றும் ஒரு ஒரு வலம்புரி சங்குடன் மாதம்ப பிரதேசத்தில் வைத்து அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஆனைவிழுந்தான் வனஜீவராசிகள் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று உரிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் வந்த மோட்டார் சைக்கிள்களையும் வனவிலங்கு உத்தியோகத்தர்கள் எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# யாழ். நெடுந்தீவு கடற்பகுதியில் 26 கிலோ கேரள கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பகுதியில் கடற்படையினரால் 26 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இலங்கை கடற்படை வசபா நிறு வனத்துக்குச் சொந்தமான கரையோர ரோந்து கப்பல்கள் நேற்று (07) நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது.

இதன்போது, கடல் பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக 44 பொலித்தீன் பொதிகள் மிதப்பதை அவதானித்து அவற்றை மீட்டு சோதனைக்கு உட்ப டுத்தினர்.

அதில் இருந்த 126 கிலோ 300 கிராம் கேரள கஞ்சா இருப்பது இதன்போது தெரியவந்தது.

கஞ்சா கையிருப்பை தரையிறக்கும் போது கடற்படையினரின் நடவடிக்கை காரணமாக கைவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கஞ்சா கையிருப்பின் பெறுமதி சுமார் 50 மில்லியன் ரூபாவாக இருக்கும் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

# மூடப்பட்ட “சதோச” கிளைகளை மீண்டும் திறந்து செயற்படுத்துக!

## அஷ்ரப் தாஹிர் எம்.பி. வேண்டுகோள்

(அபு அலா)

அம்பாறை மாவட்டத்தில் மூடப்பட்ட “சதோச” கிளைகளை மீண்டும் திறக்குமாறு கோரிய கடிதம் ஒன்றை திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வர்த்தக, உணவு கூட்டுறவுத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவை வருமாறு,

மக்களின் நலனைக் கருத்தில் கொண்ட முன்னாள் அமைச்சர் றிஷாட் பதியுதீனின் முயற்சியால் அம்பாறை மாவட்டத்தில் நற்பிட்டிமுனை, மாளிகைகாடு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்களில் திறந்து வைக்கப்பட்ட “சதோச” கிளைகள் கடந்த அரசால் மூடப்பட்டுள்ளன. அதனால் அரச மானிய விலையில் வழங்கப்படுகின்ற பொருள்களை பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் அந்தப் பிரதேச மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்



அரச மானிய அடிப்படையில் வழங்கும் அத்தியாவசிய பொருள்களை அந்தப் பிரதேச மக்களும் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் கார்ப்புணர்ச்சி கொண்ட கடந்த கால அரசு மக்கள் நலனைப் பாராது மூடிய சதோச கிளைகளை, மீண்டும் திறந்து வைத்து அதனை மக்கள் பாவனைக்காக அவசரமாக தந்துதவுங்கள்.– என்றுள்ளது.









# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோதுமை மா வழங்கிய இம்ரான் எம்.பி.

(அபு அலா )

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிண்ணியா, மூதூர் மக்களுக்கு நிவாரணம் வழங்கி வைக்கும் நோக்கில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் 2250 கிலோ கோதுமை மாவைக் கிண்ணியா, மூதூர் பிரதேச செயலாளர்களிடம் வழங்கினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்,

பிரதேச செயலகத்தின் நிவாரண பணிகளுக்கு உதவும் முகமாக ஒரு தொகை கோதுமை மாவைப் பிரதேச செயலகத்திடம் கையளித்து வைத்துள்ளேன்.

ஏனையபிரதேசசெயலகங்களுக்கும் வழங்கத் திட்டமிட்டுள்ளேன். இதற்கு மேலதிகமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பணிகளை மாவட்டம் முழுவதும் எனது பிரதிநிதிகள் மூலம் முன்னெடுத்துள்ளேன் என்று தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசின் நிவாரணப் பணிகள் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்று பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் கூறுவது போன்று அனர்த்த நிலைமைகளின் போது அரசின் செயற்பாடுகள் மந்த கதியிலயே நடைபெறுகின்றன.

எனவே ஜனாதிபதி இது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பொதுப் பணிக்கு என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள்!

## மேஜர் ஜெனரல் களப்பத்தி கோரிக்கை





(அபு அலா)

பொதுப் பணிக்காக என்னையும் இணைத்துக் கொள்ளுங்கள் என்று, இலங்கை இராணுவத்தின் 24 ஆம் படைப்பிரிவின் 16 ஆவது கட்டளை தளபதியாக நியமனம் பெற்றுள்ள மேஜர் ஜெனரல் எச்.சீ.எல்.களப்பத்தி பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

நிந்தவூர் பிரதேச இளைஞர் தன்னார்வ அணியினின் உறுப்பினர்களுடன் இடம்பெற்ற சினேகபூர்வ சந்திப்பின் போதே கட்டளைத் தளபதி இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு (05) அம்பாறை - மல்வத்தையில் அமைந்துள்ள படைத் தலைமையக்கத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவித்த அவர்,

அம்பாறை மாவட்டம் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் மாவட்டமாகும். இங்கு வாழும் மக்களின் சகல பிரச்சினைகளிலும் பொறுப்பு வாய்ந்த முறையில் நானும் பங்கெடுக்கத் தயாராக இருக்கிறேன். பொதுப் பிரச்சினைகளின் போது பொது மக்கள் தன்னை தொந்தரவு செய்ய வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

24 மணிநேரமும் மக்கள் பணி செய்ய நான் பணிக்கப்பட்டுள்ளேன். குறிப்பாக விசேட அனர்த்தங்கள் இடம்பெறும்போது நானும், எனது படைவீரர்களும் தயாராக இருப்போம்.

மேலும், நான் கடமை ஏற்ற முதல் தினமான (04) ஆம் திகதியே அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடி கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டேன். அது தொடர்பான எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விரைந்து செயற்படவுள்ளேன்.- என்றார்.

இந்த சந்திப்பில் தன்னார்வ அணியின் பிரதான செயற்பாட்டாளர் எஸ்.எல்.எம். நாஸிரூன், மௌலவி ஏ.பி.எம். ஷிம்லி மற்றும் வஸீம் சஜ்ஜாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இரு தடவைகள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், மீனவருக்கு நஷ்ட ஈடு வழங்குக!

## உதுமாலெப்பை எம்.பி. வேண்டுகோள்

(அபு அலா )

வடகிழக்கு மாகாணங்களில் இரு தடவைகள் வெள்ள அனர்த்தங்களால் ஆயிரக் கணக்கான விவசாயிகளும், மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான விஷேட நஷ்ட ஈடு வழங்கும் நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் 161,916 பேரும், 85 ஆயிரம் ஹெக்ரெயர் விவசாயக் காணிகளும், 605 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை நிந்தவூர், காரைதீவு, கல்முனை பிரதேசங்களைச்



சேர்ந்த 66 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்களின் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. பொத்துவில், திருக்கோவில் பிரதேச மீனவர்களின் இயந்திர வள்ளங்களும் வெள்ளத்தால் சேதமாகியுள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மீனவர் சமூகத்துக்கு இதுவரை எவ்விதமான நிவாரணங்களும் வழங்கப்படாத நிலைமையே காணப்படுகின்றது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது. இதனை மீன்பிடி அமைச்சர் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மீனவர்களுக் கான நஷ்ட ஈடுகளை வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இத்தொகை விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. எனவே விவசாயிகளுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகரித்து வழங்க வேண்டும்.

இவை மாத்திரமல்ல, இம்முறை ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் அம்பாறை மாவட்டத்தில் 11 பேர் மரணமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் எமது மாவட்ட மக்கள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

எனவே, இந்த விடயங்களை அரசு கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகரித்து வழங்குவதுடன், மீனவர்களுக்கான அவசர உதவிகளையும் வழங்க வேண்டும்.– என்றார்.

# நிந்தவூர் மாட்டுப்பள்ளை பாலம் ஊடாக கனரக வாகனங்கள் பயணிக்க அனுமதி

## இன்று அரச அதிபர் நேரில் விஜயம்



(அபு அலா)

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் உடைந்த நிந்தவூர் பிரதான வீதி மாட்டுப்பள்ளை பாலம் உடைந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. அத்துடன் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த வாரம் விஜயம் செய்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரி.பாஸ்கரனின் அறிவுறுத்தலுக்கு அமைய, இந்தப் பாலத்தைப் புனரமைக்கும் பணிகள் அக்கரைப்பற்று மேலதிக மாகாண பணிப்பாளர் அலுவலகத்தின் மாகாண பணிப்பாளர் எம்.பி.அலியாரின் விஷேட கண்காணிப்பின் கீழ், இரு வாரங்களாக இடம்பெற்று வந்திருந்தது.

இன்று (08) குறித்த பகுதிக்கு விஜயம் செய்த அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம, நிலைமைகளை பார்வையிட்டார்.

இதன்போது, இந்தப் பாலத்தின் ஊடாக கடந்த வாரமாக போக்குவரத்து முறைகள் பற்றி மாகாணப் பணிப்பாளரால் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. கனரக வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்பொழுது மாற்று வழிப்பாதை பாலமாக (இரும்பு பாலம்) அமைக்கப்பட்டு, நாளை (09) திங்கட்கிழமை முதல் சீரான போக்குவரத்து இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


கடந்த வாரங்களாக கனரக வாகனங்கள் செல்வதற்கு விதிக்கப்பட்ட தடை நாளை முதல் நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கனரக வாகனங்களான பஸ், லொரி, டிப்பர் உள்ளிட்ட வாகனங்கள் இப்பாலத்தினூடாக பயணிக்க முடியும் எனவும் மாகாண பணிப்பாளர் அலியார் எம்.பி. தெரிவித்தார்.

அத்தோடு அம்பாறை மாவட்ட அரச அதிபர் இந்தப் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு இடம்பெற்ற பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டார். வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட ஒலுவில் களியோடை பாலத்தை அண்டிய பிரதேசங்களையும் பார்வையிட்டார். ஒலுவில் களியோடைப் பாலத்தின் கீழ் பகுதிகளில் தேங்கி கிடக்கும் மண்ணால் ஏற்படும் பாதிப்புக்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த விஜயத்தில் பிரதம பொறியியலாளர் ரி. சிவசுப்ரமணியம், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் இஷ்ட்.ஏ. எம். அஸ்மிர் உள்ளிட்ட அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# விஜய்க்கு ஒரு சிக்கல் என்றால் நான் தான் முதலில் நிற்பேன்!

## சீமான் தெரிவிப்பு



தம்பி விஜய்க்கு ஒரு சிக்கல் என்றால் நான் தான் முதலில் நிற்பேன் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**கேள்வி:** ரஜினியை நீங்கள் சந்தித்தது ஒரு பெரிய விவாதமாக மாறி விட்டது. இந்த சந்திப்பு உங்களைப் பலவீனப்படுத்திவிட்டதாக உணர்கிறீர்களா?

**பதில்:** நீண்ட காலமாக ரஜினிகாந்தை திரைத்துறையில் ரசித்து வந்தவர்களில் நானும் ஒருவன். அசாத்திய ஆற்றல் கொண்ட திரைக்கலைஞர். நாட்டின் மதிப்பு மிக்க மனிதர்களில் ஒருவர். அவருடனான சந்திப்பு என்னை பலவீனப்படுத்தும் என்று நினைக்கவில்லை.

**கேள்வி:** ஆனால், கடந்த காலங்களில் நீங்கள் ரஜினியை கடுமையாக விமர்சனம் செய்துள்ளீர்களே..?

**பதில்:** ஒரு காலத்தில், அவர் அரசியலுக்கு வருவதாக சொன்ன பொழுது, நான் ஏற்றுக் கொண்ட தமிழ் தேசிய கொள்கை அடிப்படையில், முரண்பாடு ஏற்பட்டு அவரை எதிர்த்தோம். இப்போதைய சந்திப்பில் நான் ரஜினியிடம், "நீங்கள் மகிழ்ச்சியாக நிம்மதியாக உள்ளீர்களா?" என்று கேட்டேன். "ஆமாம்" என்று சொன்னார். அவர் மீதுள்ள அக்கறையில்தான், நான் அவரை அரசியலுக்கு வர வேண்டாம் என்று சொன்னேன். கமலிடமும் நான் இதைச் சொல்லியுள்ளேன்.

**கேள்வி:** ரஜினியிடம் அரசியல் பேசினீர்களா?

**பதில்:** இரண்டேகால் மணி நேர சந்திப்பில் சினிமா பற்றி நிறைய பேசினோம். எனது காணொலிகளை அவர் தொடர்ந்து பார்த்திருக்கிறார். அதைப் பற்றி அவர் பேசினார். "நீங்கள் மொத்தமாக சினிமாவை விட்டு விட்டீர்களே" என்று வருத்தப்பட்டார். தமிழகத்தில் எதிர்கால அரசியல் எப்படி இருக்கும் என இருவரும் பேசினோம். அவ்வளவுதான் இப்போது சொல்ல முடியும்.

**கேள்வி:** அரசியலுக்கு வரும் முன்பு உங்களின் பாசத்திற்குரிய தம்பியாக இருந்த விஜய், இப்போது எதிரியாகி விட்டாரே..?

**பதில்:** அண்ணன் தம்பி பாசம் வேறு. நானும் என் தம்பியும் கொள்கையில் முரண்படுவது வேறு. மொழி, இனம் என்று மக்களைப் பிரிக்கிறார்கள் என்று அவர் நேரடியாக எங்களை விமர்சனம் செய்கிறார். உலகம் முழுவதும் மொழி, இனம் அடிப்படையில் தான் அரசியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்க, இளைய தலைமுறை பிள்ளைகளிடம் இப்படி ஒரு கோட்பாட்டை விஜய் விதைப்பது தவறாகப் போய்விடும். ஆனால், விஜய் என் தம்பி என்பதில், அன்பிலும் பாசத்திலும் குறைவில்லை. நாளைக்கே விஜய்க்கு ஏதாவது ஒரு சிக்கல் என்றால் நான் தான் முதலில் நிற்பேன்.

**கேள்வி:** அம்பேத்கர் நூல் வெளியீட்டு விழாவில் உங்களையும் விஜய்யுடன் ஒரே மேடையில் அமர வைக்க ஒரு முயற்சி நடந்ததாமே.?

**பதில்:** தம்பி ஆதவ் அர்ஜுனா என்னிடம் பேசினார். "ராகுல் காந்தி, ஸ்டாலின், திருமாவளவன் பங்கேற்கும் மேடையில் நீங்களும் பங்கேற்க வேண்டும்" என்றார். "பார்ப்போம்" என்றேன். கடைசியில் அவர்கள் பங்கேற்காத நிலையில், விஜய் இந்த பட்டியலில் சேர்ந்துவிட்டார். அதனால், இது நமக்கு சரியாக வராது என்று சொல்லி மறுத்துவிட்டேன். அதோடு, அம்பேத்கரை பேசுவதற்கு எனக்கு இன்னொருவர் மேடை போட்டுத் தரவேண்டிய அவசியம் இல்லை.

**கேள்வி:** அந்த விழாவில் ஆளுங்கட்சியை எச்சரிக்கும் விதமாக விஜய் பேசியிருப்பதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

**பதில்:** பயணத்தில் இருந்ததால், நூல் வெளியீட்டு விழா நிகழ்வை நான் பார்க்கவில்லை. அதனால் அது குறித்து எனக்கு கருத்து இல்லை. ஆனால், நாங்கள் நீண்ட நாட்களாக ஆளுங்கட்சிக்கு பல்வேறு விவகாரங்களில் கடும் எச்சரிக்கைகளை கொடுத்து வருகிறோம்.

**கேள்வி:** ஆட்சியில் பங்கு அதிகாரத்தில் பங்கு என்பதில் உங்களுக்கு உடன்பாடு உள்ளதா?

**பதில்:** இது வரவேற்கக் கூடிய ஒன்று. எங்களது கோட்பாட்டை, கொள்கைகளை ஏற்கும் போது, கூட்டணி ஆட்சி அமைவது தவறில்லை. அதே சமயம், தனித்து அதிகாரத்தை பெறாமல் என் கனவை நிறைவேற்ற முடியாது என்பதால், அதுவரை தனித்துத்தான் நின்றாக வேண்டும்.



# இண்டியா கூட்டணிக்கு தலைமையேற்க தயார்

## மே.வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அறிவிப்பு

இண்டியா கூட்டணிக்கு தலைமையேற்கத் தயார் என்று மேற்கு வங்க முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

கடந்த மக்களவை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை (என்.டி.ஏ) எதிர்க்க தேசிய கட்சியான காங்கிரஸை முன்னிறுத்தி மாநில கட்சிகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது இண்டியா கூட்டணி. திமுக, ஆம் ஆத்மி, திரிணமூல் காங்கிரஸ், ஜே.எம்.எம், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் என மாநிலத்தில் ஆளும் கட்சிகள் பல இதில் அங்கம் வகிக்கின்றன.

ஆனால், இண்டியா கூட்டணி தொடங்கப்பட்டதில் இருந்தே பல்வேறு கூட்டணி பிரச்சினைகளும் இருந்து வந்தன. கூட்டணியை ஒன்று சேர்ப்பதில் முக்கிய பங்கு வகித்த பிஹார் முதல்வரும் ஐக்கிய ஜனதா தள தலைவருமான நிதிஷ் குமார் கடைசி நேரத்தில் பா.ஜ.க. கூட்டணியில் சேர்ந்தார். டில்லி, பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சி தனித்துப் போட்டியிட்டது.

மேலும், மேற்கு வங்கத்தை ஆளும் திரிணமூல் காங்கிரஸ் தலைவரும் முதல்வருமான மம்தா பானர்ஜி இண்டியா கூட்டணியில் அங்கம் வகித்தாலும் கூட்டணி விவகாரங்களில் பிடிகொடுக்காமல், மேற்கு வங்கத்தில் தனித்துப் போட்டியிட்டார்.

ஆனால், மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க .தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. இண்டியா கூட்டணி 239 இடங்களில் வெற்றி பெற்றது.

இந்நிலையில், தற்போது இண்டியா கூட்டணிக்குத் தலையேற்கத் தயார் என்று மம்தா பானர்ஜி நேற்று அறிவித்தார்.

இதுகுறித்து கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் முதல்வர் மம்தா பானர்ஜி கருத்து தெரிவிக்கையில்,

" நான் இண்டியா கூட்டணியை உருவாக்கினேன். ஆனால், அவர்களால் ஜஎதிர்க்கட்சித் தலைவர்கள்ஸ அதை ஒன்றாக வைத்திருக்க முடியவில்லை. நான் என்ன செய்வது? நான் இண்டியா கூட்டணிக்குத் தலைமை தாங்கவில்லை.

கூட்டணியின் தலைவர்கள் அனைவரும் ஒன்றாக இருப்பதைப் பார்க்க வேண்டும். அவர்கள் என்னைப் பொருட்படுத்துவதே இல்லை, ஆனால் நான் அனைத்து தேசிய மற்றும் மாநிலக் கட்சிகளுடனும் சிறந்த உறவைப் பேணி வருகிறேன்.- என்றார்.




# சிரிய தலைநகர் டமாஸ்கஸை கைப்பற்றியது கிளர்ச்சிப் படை

## மத்திய கிழக்கில் பதற்றம்

சிரியாவில் உள்ள அலெப்போ மற்றும் ஹமா பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய கிழக்கு நாடான சிரியாவில் 2011ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் உள்நாட்டுப் போர் வெடித்தது.

சிரியா ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் ஆட்சியை எதிர்த்து யாத் தஹ்றிர் அல் ஹாம் என்ற கிளர்ச்சி அமைப்பினர் கடந்த வாரம் முதல் இராணுவத்துடன் மீண்டும் சண்டையைத் தொடங்கியுள்ளனர்.

ஆசாதின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரச் சூளுரைத்துள்ள கிளர்ச்சியாளர்கள் வடமேற்கு சிரியாவில் நடத்திய தாக்குதலில், இராணுவத்தினர் உட்பட 300 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போ நகர் கடந்த சனிக்கிழமை கிளர்ச்சியாளர்கள் கைக்குள் சென்றது.

இந்த நிலையில், தாம் சிரியா தலைநகர் டமாஸ்கஸ்க்குள் நுழைந்ததாக சிரிய கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, டமாஸ்கஸின் மோவாதமியா அல்-ஷாம் மற்றும் தரயா உள்ளிட்ட பல்வேறு புறநகர்ப் பகுதிகளிலிருந்தும், மிஜ்ஜே இராணுவ விமான நிலையத்திலிருந்தும் கூட அரசுப் படைகள் திரும்பப்பெறப்பட்டு விட்டன எனவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.




# நெதர்லாந்தின் அடுக்குமாடி குடியிருப்பில் வெடிப்பு சம்பவம்: 5 பேர் உயிரிழப்பு




நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் குறைந்தது 5 பேர் உயிரிழந்துள்ளனர். 4 பேர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூர் நேரப்படி நேற்று மாலை 06:15 அளவில் ஹேக் நகரின் தர வேகாம்ப் பகுதியில் இடம்பெற்ற மூன்று மாடிகள் கொண்ட கட்டடத்தில் தீயணைப்பு படையினர் மீட்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்தில் மேலும் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என நெதர்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிப்பு சம்பவத்தில் 5 அடுக்குமாடிக் குடியிருப்புகள் சேதமடைந்தன என நெதர்லாந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு
பக்கங்கள் 03
ஞாயிற்றுக்கிழமை 08/12/2024

## இணைய மோசடி குறித்து கனடாவில் எச்சரிக்கை

கனடாவில் இணைய வழியிலான மோசடிகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 12 மோசடிகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொருள்களை கொள் 02▶





# கனடாவில் அதிகரிக்கும் உணவுக்கான செலவு

**கனடாவில் நான்கு பேரை கொண்ட குடும்பம் ஒன்று அடுத்த ஆண்டில் உணவிற்காக கூடுதல் செலவை மேற்கொள்ள நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.**

**கனடாவில் நாளுக்கு நாள் உணவு பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன.**

**அந்த வகையில் இந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அடுத்த ஆண்டில் நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று 800 டொலர்கள் மேலதிகமாக உணவிற்காக செலவழிக்க நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.**


பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம், டெல் ஹோஸ் பல்கலைக்கழகம், குயில்ப் பல்கலைக்கழகம் மற்றும் சஸ்கெட்ஸ்வான் பல்கலைக்கழகம் என்பன கூட்டாக இணைந்து இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளன.

இதன்படி நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் 16,833 டொலர்களை செலவிட நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆண்டில் சராசரியாக 3 முதல் 5 வீதம் வரையில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உணவு பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் எனவும் இறைச்சி, மரக்கறி மற்றும் உணவு விடுதிகளில் விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் என்பனவற்றின் விலைகள் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.




# கனடாவில் நகையகமொன்றில் கொள்ளையிட்ட 6 பேர் கைது

கனடாவில் நகையகமொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவமொன்றுடன் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவின் மார்க்கம் பகுதியில் இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சுத்தியல்களைக் கொண்டு நகையகத்தின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணொலிகள் மூலம் கொள்ளை முயற்சி மேற்கொண்டவர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுமார் பத்து பேர் வரையில் இந்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# றொறன்ரோவில் 2025 இல் வீடு விலை உயர்வடையும்

றொறன்ரோவில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் வீடுகளின் விலைகள் உயர்வடையும் என எதிர்வுகூறப் பட்டுள்ளது.

றொறன்ரோ பெரும்பாக பகுதியில் இவ்வாறு வீடுகளின் விலைகள் உயர்வடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

றோயல் லீபேஜ் என்ற நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டு நான்காம் காலாண்டு பகுதியில் வீடுகளின் விலைகள் ஐந்து வீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

சராசரியாக வீடுகளின் விலைகள் 1225770 டொலர்களாக காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கனடாவில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களின் பட்டியல் விஸ்தரிப்பு

கனடாவில் இதுவரை பட்டியலிடப் பட்டிருந்த தடை செய்யப்பட்ட ஆயு தங்களின் வரிசையில் மேலும் நூற் றுக்கணக்கான புதிய ஆயுதங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.

இது தொடர்பான அறிவிப்பு உடன் அமலுக்கு வரும் வகையில் நடை முறைப்படுத்தப்படும் என அறிவிக்கப் பட்டது.

ஏற்கன இந்த ஆயுதங்ளை சட்ட ரீதியான முறையில் கொள்வனவு செய்தவர்களுக்கு மன்னிப்பு வழங் கப்படும் எனவும் அவர்கள் அவற்றை ஒப்படைக்க முடியும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது.

புதிய ஆயுதங்கள் தடை செய்யப் பட்ட பட்டியலில் இணைக்கப்பட்டமை குறித்து கனடிய பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லீபிலான்க், பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் உள்ளிட்டவர்கள் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

துப்பாக்கிகள் மூலம் இடம் பெற்று வரும் வன்முறைகளை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படு கிறது.

## இணைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனவு செய்வார்கள் மற்றும் பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இணைய வழியூடாக விளம்பரம் செய்து விற்பனை செய் யும் போது அதிக அளவிலான கொள்ளைச் சம்பவங்களும் மோசடிகளும் இடம் பெறுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் இவ்வாறான கொள்ளை மற்றும் மோசடி சம்பவங்கள் தொடர்பில் கூடுதல் முறைப் பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் கத்தி முனையில் பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.



இதுவரையில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்ட இவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.



# ரொறன்ரோவில் பனிப்பொழிவு; வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை

ரொறன்ரோவில் நிலவிவரும் பனிப்பொழிவுடனான காலநிலை காரணமாக வாகன சாரதிகள் அவதானமாக பயணம் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோ மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 2 முதல் 4 சென்றி மீற்றர் வரையில் பனிப் பொழிவு ஏற்படும் என எதிர்வு கூறப் பட்டுள்ளது.

எனவே வாகன சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்த வேண்டும் என தெரிவிக் கப்படுகிறது.

குறிப்பாக வீதிகள் வழுக்கும் தன் மையுடன் காணப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக வாகன போக்குவரத்துக்களில் தாமத நிலை ஏற்படலாம் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.



